**Judicial Form No.53**

**(See Rule 43)**

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

CC.No. 472 / 2024

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 1** - -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால்,Grade-III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | குப்பன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் தாலுக்கா |
| த/பெ. | - | மாணிக்கம் | வயது | - | 75 |
| கிராமம் | - | வீரணாம்பட்டு | | | |

19. 03. 2025

1,2 எதிரிகள் ஆஜரில்லை. 1,2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை.

1. நான் தற்போது வீரணாம்பட்டு கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் புகார் கொடுத்து அருள் என்பரை தெரியும். சுமார் 5-6 ஆண்டுகளுக்கு முன்பு எடப்பாளையத்தை சேர்ந்த பாய் என்பவருக்கு சொந்தமான சுமார் 4-1/2 ஏக்கர் நிலத்தை அருள் என்பவர் குத்தகைக்கு கரும்பு பயிர் செய்து வந்தார். அந்த நிலத்தை நிலத்தின் உரிமையாளரான எடப்பாளையத்தை சேர்ந்த பாய் காலை 09.00 மணியளவில் நான் நெல் அறுத்துக்கொண்டிருந்தபோது அருள் என்பவர் நிலத்தில் அந்த பாய் நெருப்பு வைத்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.

2. பின்பு இது சம்மந்தமாக அருள் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

1. எனக்கு இந்த சம்பவம் நேரடியாக தெரியாது அருளின் அப்பா சொல்லிதான் தெரியும் என்றால் யார் நெருப்பு வைத்தது என்று தெரியாது எரியும்போது பார்த்தேன். எந்த தேதியில் நடந்தது என்று ஞாபகம் இல்லை. புகார் கொடுத்தது எனக்கு தெரியாது. போலீசார் 6 மாதத்திற்கு முன்பு சம்மனில் கையெழுத்து வாங்கும்போதுதான் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளது எனக்கு தெரியும்.

2. 6 மாதத்திற்கு முன்புதான் போலீசார் என்னிடம் வந்து கேட்டார்கள் அதற்கு முன்பு என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தற்போது அருளின் தந்தைதான் என்னை சாட்சி சொல்ல கூப்பிட்டு வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் யார் எதிரி வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அருளின் அப்பா வந்து சாட்சி சொல்லு என்று சொன்னதால்தான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

3. சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அருளுக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

D.M-cum-JM.
T.V.Nallur.